1970 மார்ச் 5]

THIRU T. MARTIN : Sir, may I request the Hon. Minister to state the number of students who have passed from this Polytechnic and who are now unemployed in this State?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 214, 215, 216 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும். அடுத்த வினா 217.

அரசு கிடங்குகளுக்கு வந்துசேர வேண்டிய அரிசி

*217 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969 அக்டோபர் மாதத்தில், ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆவடி குடோனுக்குப் போக வேண்டிய 12 லாரி அரிசி காணாமல் போனது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவை மொத்தம் எத்தனை மூட்டைகள் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ).

1969-ம் ஆண்டு மே, ஜூன், ஜூலை மாதங்களில் எழும்பூர் ரயில்வே கிடங்கிலிருந்து தமிழ்நாடு அரசு கிடங்குகளுக்கு வந்து சேர வேண்டிய 12 லாரி அரிசி காணாமற்போனது. அதில் மொத்தம் 1,095 மூட்டைகள் அனுப்பப்பட்டன. இது சம்பந்தமாக வழக்கு நீதி மன்றத்தின் விசாரணையில் இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, அரிசி ஏற்றப்பட்ட அத்தனை லாரிகளும் அரசுக்குச் சொந்தமான லாரிகளா? அல்லது வழக்கம்போல் தனியார் துறையிலிருந்து வருகின்ற லாரிகளா ? அன்றையதினம் மட்டிலும் திடீரென்று கண்டுபிடிக்கப் பட்ட லாரிகளா ? அல்லது ஒவ்வொரு லாரியாக, இரண்டு இரண்டு லாரியாகக் கண்டுபிடிக்கப்பட்டதா ? அல்லது 12 லாரிகளும் ஏக காலத்தில் சிக்கியதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அது சர்க்கார் லாரி அல்ல. காண்ட்ராக்டர் லாரிதான். பிடிக்கப்பட்ட 12 லாரிகளைப் பற்றிய முழு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வழக்குப் பதிவுசெய்யப்பட்டு விசாரணை நடைபெறுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, 1095 மூட்டைகள் கடத்திச் செல்லப்பட்டுவிட்டன என்று கூறினார்கள். அந்த மூட்டைகளில் எவ்வளவு போலீசாரால் கைப்பற்றப்பட்டன என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மூட்டைகள் கைப்பற்றப் படவில்லை. குற்றவாளிகள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : மூட்டைகள் கைப்பற்றப்பட வில்லை, குற்றவாளிகள் பிடிபட்டிருக்கிறார்கள், வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொன்னால், நம்முடைய அதிகாரிகளின் திறமை எப்படி இருக்கிறது என்று தெரிந்துகொள்ளலாம். இனி மேலாவது அவற்றைக் கண்டுபிடிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சர்க்கார் ஊழியர்கள் திறமையாகச் செயல்பட்ட காரணத்தினால்தான் குற்றவாளிகள் பிடிபட்டிருக்கிறார்கள். அவர்களைக் குற்றம் சாட்டிப் பயன் இல்லை. லாரிகள் காணவில்லை என்றவுடனேயே விஜிலன்சுக்கு ரிப்போர்ட் செய்து அவர்கள் தீவிரமாகப் புலன்விசாரணை செய்ததன் காரணத்தினால்தான் குற்றவாளிகள் பிடிபட்டிருக்கிறார்கள். மூட்டைகள் எங்கே போயிற்று என்றால் பலபேர்களுடைய வயிற்றில் மறைந்திருக்கலாம். மேற்கொண்டு தகவல் கொடுப்பதற்கில்லை.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : மூட்டைகள் அகப்படவில்லை, லாரிகள் அகப்பட்டன என்றால் அந்த லாரிகளைப் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : லாரிகள் பறிமுதல் செய்யப்படுமா என்று கேட்டார்கள். வழக்கைப் பாதிக்காத காரணத்தினால் இதில் ஏற்பட்டிருக்கிற சம்பவம் ஒன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். பியட், அம்பாசிடர் போன்ற கார்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நம்பர்களை இந்த லாரிகளுக்குக்கொடுத்து ஏமாற்றியிருக்கிறார்கள். ஆயினும் டிரைவர்கள் பிடிபட்டிருக்கிறார்கள். காண்டிராக்டர்கள் இருக்கிறார்கள். ஆகவே பணத்தை மீண்டும் வசூல் செய்துவிட முடியும்.

திரு. க. இராமமூர்த்தி : இந்த வழக்கு சம்பந்தமாக காண்டிராக்டர்கள், லாரிகளின் சொந்தக்காரர்கள் ஆகியோர் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : குற்றவாளிகளாக ஆக்கப் பட்டிருக்கிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த 12 லாரிகளும் ஏற்றிய அரிசி மூட்டைகளைக் கடத்துவதற்கு சில அதிகாரிகளும் உடந்தையாக இருந்திருக்கிறார்கள். இது திட்டமிட்டே செய்யப் பட்டிருக்கிறது. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியில் குற்றச்சாட்டு இருக்கக் கூடாது.

திரு. வி. கே. கோதண்டராமன் : அதிகாரிகளும் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

1970 மார்ச் 5]

திரு. என். எஸ். வி. சித்தன் : ஒரு மூட்டை, இரண்டு மூட்டை அல்ல, 1,095 மூட்டைகள் கடத்தப்பட்டிருக்கின்றன என்றால் அது இந்த அரசாங்கத்திற்கு விடப்பட்ட ஒரு சவாலாகும்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : கேள்வியைக் கேளுங்கள். சவால்களை டிமாண்டில் வைத்துக்கொள்ளலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அந்த மூட்டைகள் என்றைக்குக் காணாமற் போயின? என்றைக்குக் கண்டுபிடிக்கப்பட்டன? குற்றவாளிகள் என்றைக்குக் கண்டு பிடிக்கப்பட்டார்கள்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த மூட்டைகள் காணாமற் போனது அரசாங்கத்திற்கு விடப்பட்ட சவாலாகும் என்றால், குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களை வழக்குமன்றத்தில் இந்த அரசாங்கம் நிறுத்தியிருக்கிறது என்றால் இது எதிர்க் கட்சிகளின் தவறான பிரச்சாரத்திற்கு எதிராக விடப்பட்ட இன்னொரு சவாலாகும்.

Government Pleaders

* 218 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state whether Government Pleaders in Districts are being appointed on tenure basis?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. க. கோமதிசங்கர திட்சிதர் : ஹைகோர்ட் பப்ளிக்ப்ராசிக்யூடர் மாத்திரம் 5 வருஷ காலத்திற்கு நியமிக்கப்படுகிறார். ஏன் ஜில்லாக்களில் உள்ள சர்க்கார் ப்ளீடர்களுக்கும் இதுபோல் செய்யக்கூடாது என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர்நீதி மன்றத்தில் பப்ளிக் ப்ராசிக்யூடர் நியமனம் சம்பந்தமாகத் தனி விதி இருக்கிறது. மாவட்ட அளவில் வேறுமாதிரி விதிகள் இருக்கின்றன. அந்த ஸ்டாண்டிங் ஆர்டர்படி நியமனம் செய்யப்படுகிறார்கள்.

திரு. கே. விநாயகம் : பப்ளிக் ப்ராசிக்யூடர் ஆனாலும் சரி, கவர்ன்மெண்டு ப்ளீடர்கள் ஆனாலும் சரி, திறமையையே அடிப்படையாக வைத்து நியமனம் செய்யப்படுகிறார்கள், கட்சி அடிப்படையில் இல்லை என்று சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : யார் யார் திறமையாக இருந்தாலும்—எந்தக் கட்சியில் இருந்தாலும்—அவர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். ஒரு கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காக திறமையானவர்கள் கூட நியமிக்கப்படக்கூடாது என்பதல்ல. எந்தக் கட்சியில் இருந்தாலும்—யார் திறமையானவர்களோ அவர்களை ஏற்றுக்கொள்கிறோம்.